
# நவ சமசமாஜ

நவ - டிச 87




வது

ஆண்டு விழா

# செய்தித்தாள்


12, பெரக் வழி
கொழும்பு - 2.



www.tamilarangam.net

www.tamilarangam.net

# ராஜீவ்-ஜே.ஆர். ஒப்பந்தத்தின் பின்......

ஜே.ஆர், ரஜீவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 4 மாதங்கள் கடந்து விட்டன. முதலாளித்துவமும் , ஒரு சில அறிவாளிகளும் , தமிழ் மக்கள் மத்தியிலுள்ள ஒரு சிலர் மட்டுமல்ல , சில இடதுசாரிகள் கூட இவ்வொப்பந்தத்தின் மூலம் அமைதியை எதிர்பார்த்தனர். ஆனால் இருந்த சமாதானமும் இப்பொழுது செத்து-விட்டது.

ஆயுதப் பாணிகளான இளைஞர்களினால் இலங்கை இராணுவம் சூழப்பட்டு -இருந்ததால் அவர்கள் முகாம்களில் முடங்கிக் கிடந்தனர். இதனால் தமிழ் பேசும்-மக்களுக்கு ஓரளவு சமாதானம் இருந்தது. இப்பொழுது இந்திய இராணுவத்தின் -காட்டுமிராண்டித் தனத்தாலும் பயங்கரமான அடக்கு முறையினாலும் சமாதானமும், அமைதியும் முற்றாக அழிந்து விட்டன. தென்னிலங்கையில் சிறு முதலாளித்துவ கிளர்ச்சிவாதிகளின் அரசியல் படு கொலைகள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. இதனால் மக்கள் அமைதி இன்றியும், பயத்துடனும் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நாம் ஏற்கனவே கூறியது போல் இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்தது, தமிழ் மக்களைப் பாதுகாக்க அல்ல. வடக்கிலும் தெற்கிலும் ஏற்பட்டுள்ள-தாக்குதலிலிருந்து ஜே.ஆரைப் பாதுகாக்கவே ஆகும். ஆனால் ரஜீவிற்கே ஜே.ஆ-ரைப் பாதுகாக்க முடியாத அளவிற்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

தமிழ் போராளிகளை நிராயுதபாணிகளாக்கும் நடவடிக்கைகள் முற்றுப்-பெறவில்லை. இதனால் ராஜீவ் தமிழினத்தை அழிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்.

ஒப்பந்தத்தில் ஜே.ஆரினால் நிறைவேற்றப்பட வேண்டிய பகுதியும் நிறைவேற்றப்படவில்லை. மாகாணசபை மசோதா நிறைவேறினாலும் அதை அமுல் நடத்த முடியாமல் இருக்கிறது.

ஒரு பக்கத்தில் தென்னிலங்கை சிறு முதலாளித்துவ சக்திகள் எதிர்க்கின்றன. மறு பக்கத்தில் அரசுக்குள்ளேயே குறிப்பாக பிரேமதாசவின் கோஷ்டியினர் எதிர்க்கின்றனர். அவர்கள் மறைமுகமாக சிறு முதலாளித்துவ சக்திகளுடன் -பேரம் பேசுகின்றனர்.

இளைஞர்களின் பிரச்சனைகள் பற்றியும் , அவர்களின் விரக்தி பற்றியும், ம.வி.மு. தடை நீக்கல் பற்றியும் பிரதமர் பிரேமதாசவும், நிதி அமைச்சர் -ரொனி.டி.மெல்லும் பேசி வருகின்றனர். பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சி-னை பற்றி வெளி விவகார அமைச்சர் ஹமீது பேசி வருகிறார். இதனால் ஜே.ஆர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தனிமையாவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

தனியார் வைத்திய கல்லூரி பிரச்சினை, சம்பளப் பிரச்சினை ஆகிய காரணங்களினால் தொழிலாள வர்க்கம் ஆர்ப்பாட்டத்திற்கு ஆயத்தம் செய்து வருகிறது. அரசாங்க வைத்தியர்களின் சங்கமும், தொழிலாளர் சங்கங்களும் ஒன்றிணைந்து அரசுக்கெதிராகப் போராட ஆயத்தம் செய்கின்றன. அரசாங்கத்தினால் தூண்டப்படும் பயங்கரவாதத்திற்கும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கும் எதிராக முக்கிய இடதுசாரி கட்சிகள் நான்கும் ஆர்ப்பாட்டம் செய்யத் தீர்மானித்திருக்கின்றன.

தமது பிடியிலிருந்து நிலைமை நழுவுவதை முதலாளித்துவ வர்க்கம் உணர்ந்துள்ளது. அதனால் எல்லோரும் பொதுத் தேர்தல் பற்றி பேசுகின்றனர். ஜே.ஆர். கூட 1989ல் பொதுத் தேர்தல் என பேசத் தொடங்கியுள்ளார். ஸ்ரீ.ல.சு.கட்சி தமது ஆர்ப்பாட்டங்களைக் கைவிட்டு தேர்தலுக்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இடதுசாரிகளையும் அதற்குள் இழுத்துக் கொள்வதே அவர்களின் தேவையாகும்.

இந்த தேர்தலின் மூலம் கூடத் தணிக்க முடியாத அளவிற்கு மக்களினம் சினம் கொண்டுள்ளனர். இந்த தேர்தல் மூலம் மக்கள் புத்துணர்வடைவதுடன் தொழிலாள வர்க்க வலுவும் ஐக்கியமடைகிறது. அதை முதலாளித்துவ வர்க்கத்தின் பிடிக்குள் சிக்கிக் கொள்ளாமல் தடுக்கும் பொறுப்பு இடதுசாரிகளுடையதாகும். தெற்கிலும் வடக்கிலுமுள்ள இடதுசாரிகள் ஒரே முன்னணியில் முதலாளித்துவத்திற்கு மாற்றுச்சக்தியாக வேண்டும். இவ்வாறாக அடக்கு முறைக்கு இலக்காகியுள்ள தமிழ் மக்களையும் தெற்கில் சிறு முதலாளித்துவத்தினரும் ஒத்துழைப்பைப் பெற்று மக்களை அரசு விரோத போராட்டத்தில் முன்னெடுத்துச் செல்ல முடியும்.

இவ்வாறு தமிழ் மக்களின் தேசிய இன உரிமையை ஏற்று வடக்குத் தெற்கு ஐக்கியத்தின் மூலம் உருவாகும் மாற்றுச் சக்தியின் மூலமே இந்திய இராணுவத்தை வெளியேற்றும் நடவடிக்கையை மேற்கொள்ள முடியுமே தவிர மாற்று வழி இல்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வரலாற்றுப் பாதையில் 10 ஆண்டுகள்

மக்கள் அபிலாஷையின் மூலம் பதவிக்கு வந்த கூட்டரசாங்கம், அதன் நோக்கில் இருந்து தடம் புரண்டு வீழும் நிலை பதவிக்கு வந்த ஆறு மாத காலத்திலேயே உருவானது. பொருளாதாரச் சிக்கல் பொதுமக்களின் "பொதுவுடைமை நோக்கத்தின் மீதான எதிர்பார்ப்பை" மௌனமாக்கும் முயற்சிகள் ஆகியவற்றுக்கிடையில் 1971ல் இளைஞர்களின் கிளர்ச்சி உருவாகியது. அரசியல் தீர்வொன்றிற்கு பதிலான அடக்கு முறைக்கு எதிராக குரல் எழுப்பிய நாமும், என்னைப் போன்ற பலரும் சிறையில் அடைக்கப்பட்ட சமயத்தில், கூட்டரசு இளைஞர் கிளர்ச்சி போன்ற நிகழ்வுகள் என்னில் பொதுவுடைமை கருத்துகள் சம்பந்தப்பட்ட புதிய சிந்தனை அபிவிருத்திகளை ஏற்படுத்தின. இதற்கிடையில் தோழர் விக்கிரமபாகு கருணாரத்னவின் சந்திப்பும், அவரது கருத்துக்களையறியவும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தது. 1956 முதல் 1970 வரையிலான இலங்கை அரசியல் வரலாற்றில் ஏற்பட்டிருந்த முரண்பாடுகளுக்கு தீர்வு காணுவதில் பொதுவுடைமை வாதம் பெருமளவு முன்னின்றதும், தவிர்க்கமுடியாததுமாகவிருந்தது. உண்மையான தொழிலாளவர்க்கப் போராட்டத்தை ஏற்படுத்தலிலும் தொடரச் செய்வதிலும் முழு அளவிலான தீவிர சிந்தனை ஏற்பட்டது.

1972ல் ல.ச.ச.கட்சியின் வருடாந்த மகாநாட்டில் உண்டான நிகழ்வுகள் அதன் பிரதிபலன் யாவும் தொடர்ந்ததோடு 1976 கட்சியின் பிளவும் ஒரு நிரந்தர இடத்தைப் பிடித்தன. 1977ல் வர்க்கப் போராட்ட வாதிகளின் பாராளுமன்றத் தோல்விக்குப் பின்னர், 'உண்மையான இடதுசாரி சக்தியைக் கட்டியெழுப்பவும், வர்க்கப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும் வேண்டுவதான அறை கூவலில் முன்னின்று செயல்பட்டோம். அதில் எவ்வளவோ இடையூறுகள் இன்றுவரை ஏற்பட்டன. எனினும் அந்நோக்கத்தில் மாற்றமில்லை. எனினும் அந்நோக்கத்தை அடைவதில் வெற்றி இது வரையிலும் கிட்டாத போதும் கூட, நிரந்தரமாக அந்நோக்கத்தை அடையும் பயணத்தில் சரித அபிவிருத்தி அடைந்துள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். தொழிற்சங்கத் துறையில் தொழிலாளர் பிரதிநிதிகுழு மகாநாடு வேலைத் திட்டத்திற்காக நமம் பெரும் பங்காற்றினோம். அதன் பலனாக 1980ல் உண்டான பொது வேலை நிறுத்தப் போராட்டத் தோல்வியைத் தாங்கிக்கொள்ள வேண்டி ஏற்பட்டாலும், அப்போராட்டத்தின் இறுதி பயணமாக உண்டான சத்தியாக்கிரகப் போராட்டம் சரித்திர வரலாற்றில் குறிப்பிடத்தக்க அம்சம் எனலாம்.

1977 தொடக்கம் பத்தாண்டு காலமாக தொடரும் தமிழ் தேசிய -

www.tamilarangam.net

விடுதலைப் போராட்டம், தீவிர பொதுவான வர்க்க போராட்ட வழிமுறைக்கான நம்பிக்கையை ஊட்டுவதாக அமைந்துள்ளது. இதற்குதாரணம் எஹலியகொட இடைத்தேர்தலாகும். அரச விரோத சக்திகளுடன் இணைந்து செயல்படும் சந்தர்ப்பங்கள் அநேகம் எமக்கு முன்னும், பின்னும் ஏற்பட்டன. 1982 ஜனாதிபதி தேர்தலில் உண்மையான கொள்கைத் திட்டத்தை சமர்ப்பித்து அரச விரோத இடதுசாரி சக்திகளின் ஒன்றிணைப்பை வலியுறுத்திய போது உண்மையான தெளிவான நிலைக்கு கிடைத்த வரவேற்பு, ஆதரவு மூலம் எமது நிலை சரியானதெனக்கண்டோம்.

நாம் கடந்து வந்த 10 வருட காலத்தின் அனுபவங்கள், 50 வருட காலத்தில் கூட கிடைக்கமுடியாத, மறக்கமுடியாத, பிரமிப்பூட்டும் போராட்ட அனுபவங்களாகவே உள்ளன. 1977ல் மாபெரும் சக்தியோடு அதிகாரம் அமைத்த ஐ.தே.கட்சி அரசுக்கெதிராக துணிந்து நின்று 1980 போராட்டத்தையும், ஜனாதிபதி தேர்தலிலும் எஹலியகொட இடைத் தேர்தலிலும் கலந்து மக்களோடு இணைந்து வந்த நாம் 1983 கட்சித் தடைக்கு ஆளான போதும் கூட, உண்மையான புரட்சிகரமான வேலைத்திட்டங்களினூடு தவறாது எமது நோக்கங்களை அடையும் பணிகளை நிறைவேற்றி வந்தோம். 1984 மே தின கொண்டாட்டத்தில் இடதுசாரி முன்னணி எம்மைக் கைவிட்ட போதிலும் கூட ஐக்கிய தொழிலாளர் சம்மேளனத்தின் பெயரில் "நவசமசமாஜ" மே தினத்தை முன்னெப்போதையும்விட உத்வேகமாக கொண்டாடியமை எமக்கு மேலும் மெருகூட்டியது.

1984 தொடக்கம் மக்கள் கட்சியும் இடதுசாரிகளும் இணைந்திருந்த காலத்தில் எம்மையும் இடதுசாரி முன்னணியில் இணைக்குமாறு விடுத்த கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டமை குறித்து பல்வேறு பதில்கள் கிடைத்தன. 1987ல் உள்ளூராட்சித்தேர்தல் குறித்து மேற்படி முன்னணி பிளவுறும் வரை இவ்வாறான நிலை நீடித்து வந்தது. 1987 மே தின தடையைத் தொடர்ந்த வேலைத்தளங்களிலும், மக்களின் ஆதரவுடன் மே தின உரிமையை நிலை நிறுத்தும் வகையில் நாமும் ஒருகணம் இடதுசாரி முன்னணியில் இணைந்தோம். இடதுசாரி முன்னணி மக்கள் போராட்ட வழி முறையைப் பின்பற்றுவதும் பின்பற்றாததும் சம்பந்தப்பட்டே முன்னணியில் நாம் இணைவதும், இணையாததும் தங்கியிருந்தது என்பது துல்லியமாயிற்று. தமிழ் பிரச்சினை சம்பந்தமாக நாம் கொண்டிருந்த கொள்கையும் அவ்வாறுயிற்று என்பதும் வெளிப்படையாயிற்று.

பத்து வருடத்திற்கு முன் எம்மோடு பயணத்தை ஆரம்பித்த எல்லோரும் எம்மோடு இன்றில்லை என்பது உண்மை. அதிகமான பொறுப்புகளினூடு தளர்ந்தொரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிலர் தூர நின்றும் எம்மை நோக்கியவாறே தொடர்கின்றனர். குறுகியதும் - பாதுகாப்பானதுமான வழிமுறைகளை பின்பற்றிய சிலர் பிரச்சினை அலைகளினால் - அள்ளுண்டு அங்கு மிங்குமாக திசைமாறியுள்ளனர். அவ்வாறாயினும் உண்மையான ஒரு சிலர் சிலராகவோ, தனியாகவோ எம்மோடு இணைந்து கொண்டிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. எந்தவொரு புரட்சிவாதியும் போதுமான ஆத்ம திருப்தியுடன்- திரும்பிப் பார்க்கும் 10 வருட கால வரலாறு நிறைவுறும் இவ் வேளையில் தனிப் பட்ட முறையில் என்னினதும், பொதுவாக கட்சியினதும் கௌரவத்தைத் தெரிவிப்ப-து தம்மால் சுமக்க முடியாத முடியாதளவு பொறுப்பை ஏற்று இன்னல் நிறைந்த இப்பயணத்தில் எம்மோடு இணைந்து வந்த எமது தோழர்களுக்கேயாம். முரண்பாடுகளுக்கு வளைந்து கொடுக்காத மனபலத்தையும், தியாகத்தையும் அவர்கள் பெற்றது சரியான அரசியல் சிந்தனையின் எதிர்கால நோக்கத்தின் மூலமே என்பது- கண்கூடு.

( நவசமசமாஜ கட்சியின் 10வது ஆண்டு விழாவை முன்னிட்டு தோழர். வாசுதே-வ நாணயக்கார " உறரய " பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது. )

## நந்தன மாரசிங்கவின் படுகொலை தரும் பாடம் :

இராசரட்டை மக்களின் அன்புக்குப் பாத்திரமான இளம் இடதுசாரியும்- போராளியும், தொழிலாளர்களின், விவசாயிகளின், மாணவர்களின் போராட்டத்தில் தனது பங்கை முதன்மையாகச் செலுத்தியவருமான நந்தன மாரசிங்க கடந்த நவம்பர் 29ம் நாள் ஜனநடமாட்டம் நிறைந்த அனுராதபுர நகரின் மத்தியி-ல் பட்டப்பகலில் காட்டுமிராண்டித்தனமாக சுட்டுக் கொல்லப்பட்டார். சினம்-கொண்ட சிறு முதலாளித்துவ கிளர்ச்சிக் காரர்களின் வேட்டைக்கு இலக்கானார் - என்பது கொலையைத் தொடர்ந்த போலீஸ் உளவாளியென தமது கொலையை - நியாயப்படுத்த பரப்பிய வதந்தியிலிருந்து நிரூபணமாகிறது.

ஒரு போராட்ட வீரரான இடதுசாரி என்பதைத் தவிர இவரின் அரசியலுக்கு நாம் பொறுப்பல்ல எனினும், இவரின் இறுதி யாத்திரையில் பங்குபற்றிய - ஆயிரமாயிரம் துயரம் தோய்ந்த முகங்கள் இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அப்பட்டமான பொய் என்பதை உறுதிப்படுத்தின.

இது பற்றிய ஒரு பக்க சார்பான விசாரணையை மேற்கொண்ட இரகசிய நீதிமன்றத்தின் தீர்ப்பையும், அதை நிறைவேற்றும் முறையையும் பார்க்கும் போது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதில் அணுவளவாவது உண்மை இருக்கும் என எவ்வித ஆதாரமேயில்லை.

இத்தகைய நடவடிக்கைகளினால் இன்று குற்றவாளிக் கூண்டில் நிற்கும் முதலாளித்துவம் முறைப்பாட்டாளராக மாற வழி வகுக்கும். அதனால் அரசு மேற்கொண்டுள்ள படுகொலைகளுக்கு எதிராக மக்களின் கருத்தை கட்டியெழுப்புவதற்கு பாதகமேற்படும் என்பது தெளிவு. அதன் விளைவாக ஆட்சியிலுள்ளவர்கள் தமது அரசியல் எதிரிகளைத் தீர்த்துக் கட்டிவிட்டு தப்பிக் கொள்ள வழி ஏற்பட்டுள்ளது. அவர்கள் மேற்கொள்ளவேண்டியதெல்லாம் ஒரே ஒரு நடவடிக்கையாகும். தமது எதிரிகளை பொலிஸ் உளவாளிகள் எனக்குற்றம் சாட்டி பிரசாரம் செய்வது. இதனால் தூண்டப்பட்ட ஒரு பக்கச் சார்பான நீதி மன்றம் தீர்ப்பு வழங்கி அத்தீர்ப்பை நிறைவேற்றும் முதலாளித்துவத்தின் நோக்கம் நிறைவேற்றுவதோடு அரசுக்கு எதிராக எழும்பி வரும் விரோத அலைகள் திசை திருப்பவும் ஏதுவாகும்.

இன்று பல்வேறு கோணங்களிலிருந்து அரசுக்கு எதிர்ப்பு எழும்புகிறது. காரணங்கள் பலவாக இருக்கலாம். இச்சந்தர்ப்பத்தில் அரசு இச்சக்திகளுக்கிடையில் மோதலை உருவாக்கி ஒருவரை ஒருவர் அழிக்கும் நிலையை உருவாக்கி தமது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்கிறது. மாரசிங்கவின் படுகொலையிலிருந்து இதை உணர வேண்டும்.

வடக்கில் விடுதலைப் புலிகளும் இத்தகைய நடவடிக்கைகளையே மேற்கொண்டன. தமது இரகசிய நீதிமன்றத்தின் ஒரு பக்க சார்பான விசாரணையில் தீர்ப்பளித்து அதை நிறைவேற்றினர். தம்முடன் ஒரே நோக்கத்திற்காகப் போராடிய தமது சகாக்களை அழித்தனர். இதனால் ஒரு பிரிவினரை எதிரியுடன் இணையும் அளவிற்குத் தள்ளி விட்டனர். இதனால் ஒட்டு மொத்தமாகப் பாதிக்கப்பட்டது விடுதலை இயக்கமாகும். அக்கரையிலும், இக்கரையிலும் உள்ள முதலாளித்துவத்தின் சதிக்குள் மாட்டிக்கொண்டது. இம்முட்டாள்தனமான நடவடிக்கையின் விளைவாக விடுதலை இயக்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு ஈடுசெய்ய முடியாததாகும்.

தெற்கிலும் இந்நிலை என்றால் அதன் விளைவு பெரும் துயர் ஆகும். மரணபயத்துடன் வாழவேண்டிய அடிமையாக இம்மண்ணில் வாழவேண்டி வரும். இத்தகைய நடவடிக்கைகளை சிறு முதலாளித்துவ சக்திகளுக்கு உபதேசம் செய்வதால் தடுத்துவிட முடியாது. அதற்குள்ள ஒரே வழி உண்மையான அரசு விரோத நடவடிக்கைகளாகும். இடதுசாரி புரட்சிகர அரசியல் முன்னோக்கின் அடிப்படையில் அரசு விரோதப் போராட்டம் முன்னேறும் பொழுது இச்சிறு முதலாளித்துவ பயங்கரவாதம் செயலிழக்கும். போராட்ட மிகுந்த அரசுவிரோதமாக இயங்கும்போது சிறுமுதலாளித்துவச்சக்திகள் இவ்வியக்கத்தின் பின்னேவரும் நிலை ஏற்படும் என்பது உண்மை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யூ.என்.பி. அரசின் காடைத்தனங்கள்

இலங்கையின் இன்றைய அரசாங்கமானது தொழிலாளர், விவசாய, மாணவர்களின் எதிர்ப்பு அரசாங்கமாக பரிணமம் அடைந்து வருவதனை அண்மைக்கால நிகழ்வுகள் தெளிவாக்குகின்றன.

இலவச கல்வி என்ற போர்வையில் மக்களையும் மாணவர்களையும் ஏமாற்றிவரும் யு.என்.பி. அரசாங்கம் மாணவர்களின் அடிப்படை உரிமைகள் கஷ்டிடித்தனமாக நிராகரித்து வருகின்றது. என்பதனை மிக்க மனவருத்தத்துடன் தெரிவிக்கின்றேன். இலங்கை இந்திய போலி சமாதானத்தின் பின்னர், உட்புகுந்த இந்திய கொலைகார படையின் அட்டகாசத்தினால் வடக்கு, கிழக்கு மாணவ மாணவிகள் தமது உயர்தர பரீட்சைகளுக்கு கூட சமுகம் அளிக்க முடியாதவாறு உட்படுத்தப்பட்டுள்ளனர். இலங்கை இராணுவம் செய்த அதே நடவடிக்கைகளை இன்னும் அதிகப்படுத்தி ஆற்றியதனால் மாணவ மாணவிகள் தமது கல்வியை கைகளுக்குள் கட்டுப்படுத்த முடியாமலிருக்கின்றனர். ஒழுக்கமான படையென பாரத தலைவர் ராஜீவ் சான்று பகிரப்பட்ட சமாதானப் படையினர் மாணவிகளைக் கற்பழித்தும் யாழ்பல்கலைக்கழக கம்பியூட்டர் பிரிவை முற்றாக நாசப்படுத்தப்பட்டமையும் எம் ஆத்திரத்தை உண்டு பண்ணுகிறது.

வடக்கு கிழக்கில் மாணவர்களின் நிலை இவ்வாறிருக்க தெற்கு நிலைமையும் தெற்கு எதிராக போட்டியிடுகின்றன. அண்மையில் களனி பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களால் முன் வைக்கப்பட்ட மிக நியாயமான மூன்று கோரிக்கைகளுக்காக மாணவர்களை கைது செய்தும் காட்டுமிராண்டித் தனமாக காயப்படுத்தியும் இலங்கைப் படையினர் தர்பார் புரிந்தனர். இதேவேளை கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டதாரி மாணவர்களைக் கைது செய்து உள்ளதையும் நாம் மறக்க முடியாது. இதேவேளை வடகொழும்பு தனியார் வைத்திய கல்லூரி தொடர்பான அரசின் அசிரத்தை ஏழை மாணவர்களுக்கு இன்னும் அதிர்ச்சியை அளித்துள்ளனர்.

மொத்தமாக இலங்கையின் இன்றைய யூ.என்.பி. அரசாங்கம் சகல பிரிவு மாணவ மாணவிகளின் உரிமைகளை நசுக்கி அவர்களின் வாழ்க்கையை தெருவுக்கு கொண்டுவர தீர்மானித்துள்ளது. இத்தகைய பிற்போக்கு அரசின் கழுத்தை நசுக்கி ஒரு புரட்சிகர சோஷலிச திட்டத்தை நடைமுறைப்படுத்த சகல மாணவ மாணவிகளும் நிபந்தனையின்றி ஒன்றுபடுவதே எங்கள் வாழ்க்கையில் வசந்தத்தை வரவழைக்க ஒரே வழியாகும்.

— கவிஞர். நிதானிநாதன் — (பேராதனை பல்கலைக்கழகம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டு தோட்டத் தொழிற்சங்கத் தலைவர்கள் அமைச்சர்களாகப் பதவி வகிக்கும் இவ்வரசாங்கத்தின் 11வது வரவு செலவு திட்டத்தை நிதியமைச்சர் ரொனி.டி.மெல் தொடர்ச்சியாகச் சமர்ப்பித்து வரலாற்றில் இடம் பெற்று விட்டார். இப் பதினொரு தடவையும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை மறந்த- அவர் மட்டுமல்ல, தொழிற்சங்கத் தலைவர்களான இருவரையும், தமது வர்க்கத்திற்கு சிறந்த சேவையை கவனமாக ஆற்றி வருபவர்கள் என்று வரலாற்றில் இடம் பெற வைத்திருக்கிறார். முதலாளித்துவத்தைப் பொறுத்த மட்டில் பொருத்தமான - இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

1984ம் ஆண்டு ஏப்ரில் சம்பள உயர்விற்கு இவ்வரசாங்கமோ இத்தொழிற்சங்கத் தலைவர்களோ உரிமை பாராட்ட முடியாது. ஏனெனில் சம்பள உயர்வு- கோரி வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தீர்மானித்தது மலையக தோட்டத்தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டியாகும். அதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இழுத்து விடப்பட்டதோடு, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் அங்கத்தவர்கள் தமது தலைமையின் வேண்டுகோளைத் தூக்கியெறிந்து போராட்டத்தில் - கலந்து கொண்டனர். இப் போராட்டத்தில் அரசு பணிந்தது. அதனால் நாம் தான் சம்பள உயர்வைப் பெற்றுத் தந்தோம். என்று பெருமை பேச முடியாது. இது - நடந்தது 1983ம் ஆண்டு ஜூலை இனக் கலவரத்தின் பின் என்பது குறிப்பிடத்தக்கது.

சம்பள உயர்வை மட்டுமல்ல இவ்வரசு வழங்கத்தவறியது. 1982ம் ஆண்டு பெப்பிரவரி 18ம் நாள் சம்பள நிர்ணய சபை, வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கு 06 சதம் வழங்க வேண்டுமென்ற தீர்ப்பை அமுல் நடத்துவதிலும் பின்வாங்கியது. - 1982ம் ஆண்டு வாழ்க்கைச் செலவு புள்ளி 418. இன்று 677. இதனால் ஏறக்குறைய 10 ரூபாவை ஒரு நாளைக்கு ஒரு தோட்டத் தொழிலாளி இழக்கிறான். இதன் விளைவாக மலையக தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி குறைந்த பட்சம் 1250 ரூபா மாதச்சம்பளம் கூடிவரும் வாழ்க்கைச் செலவு புள்ளிக்கு ரூ.5 தரவேண்டுமென்ற - கோரிக்கைகளை முன்வைத்து சாதகமான பதில் கிடைக்காவிடில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டி வரும் என ஜனாதிபதி அவர்களுக்கு அறிவித்துள்ளது. இதி-ல் ஜ.ல.தோ.தொ.யூ. அங்கம் வகிக்கிறது.

இத்தகைய ஒரு நிலையில் எப்போதும் போலத் தோட்டத் தொழிலாளர்க-ள் ஓரணி திரண்டு தமது கோரிக்கையைப் பெற போராட முன்வர வேண்டும். - தவறினால் 17/50 போராட்டத்தின் போது ஒரு நாளைக்கு ரூ.1 வீதம் 30ரூபா வாங்கித்தரத்தான் போராடுகிறோம் எனக்கூறி இறுதியில் ரூ. 3 ஐக்கூட முழுமையா

www.tamilarangam.net

ப்பெற முடியாமல் தோட்டத் தொழிலாளர் தோல்வியடைந்ததை இந்நேரத்தில் நினைவு கூற வேண்டும். அன்று கூட்டிக் கொடுத்தவர்கள் இன்றும் கூட்டிக் கொடுப்பார்கள். அத் தலைமைகளின் தேவை தமது வர்க்கத்திற்குச் சேவை செய்வதாகு-ம். இதைச் சரியாகப் புரிந்து கொண்டு செயல்பட தோட்டத் தொழிலாளி -முன் வந்தால் மட்டுமே அவனது வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படும்.

---

## மக்கள் கலை இலக்கியப் பேரவை

முற்போக்கான செயத்திட்டங்களை நடைமுறைப்படுத்த மக்கள் கலை இலக்கிய -பேரவை அண்மையில் அங்குரார்ப்பணமாகியது. இந்த அங்குரார்ப்பண நிகழ்ச்சியில் கவியரங்கும், கருத்தரங்கும் நடைபெற்றது.

கவியரங்கில் கவிஞர்கள் : எஸ். குலேந்திரகுமார்.
இம்ரு அஹமத்.
ஜுகேஹ்.
ரிஸா அலீ.
நிந்தாசாமி

ஆகியோர் பங்கு பற்றினர். இப் பேரவையின் கொழும்புக் கிளை அங்குரார்ப்பண-ம் எதிர்வரும் 17.01.1988 அன்று ஐக்கிய தொழிலாளர் சம்மேளன மண்டபத்தில் நடைபெறுமென அதன் அமைப்புச் செயலாளர் கவிஞர் நிரா விதாசன் தெரிவித்துள்ளார். தொடர்புகளை மேற்கொள்ள விரும்புவோர் கீழ்வரும் முகவரியுடன் தொடர்புறுமாறு வேண்டப்படுகிறது.

பொதுச் செயலாளர். எஸ். சீவராஜ்,
130, டி. எஸ். சேனநாயக்கா ரோட்,
கண்டி.

## கருப்புக் கொடி

தேசியக்கொடியை
ஏற்றச் சொல்கிறார்கள்
எங்கள் ஒட்டை
வீடுகளில்
மனித வேட்டைக்காரர்களுக்கு
எங்கு தெரியும்
எங்கள் வீடுகளில்
கருப்புக் கொடி தொங்குவது
- குலேந்திர குமார் -

## சமாதானம்

சமாதானம்
சாக்கடையில்
இருந்து
எழுப்புகிறது
ஓலம்